## அலவ்வ பிரதேச சபை

## குருநாகல் மாவட்டம்

-------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 31 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மார்ச் 28 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 நவம்பர் 28 திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

-------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடபட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அலவ்வ பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகள் மற்றும் காசோட்டம் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

------------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

-----------------------------------------

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது பெறப்பட்ட வீதவரி தண்டப்பணம் ரூபா 21,804 உம் மற்றும் வீதவரி முற்பெறுவனவு ரூபா 43,206 தொடர்பாக கணக்குகளில் தேவையான சீராக்கல்கள் மேற்கொள்ளப்படாமையால் ஆண்டிற்கான வீதவரி வருமானம் ரூபா 65,010 மிகையாகவும், வீதவரி தண்டப்பண வருமானம் மற்றும் வீதவரி முற்பெறுவனவுகள் முறையே ரூபா 21,804 உம் மற்றும் ரூபா 43,206 குறைவாகவும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதே போல் மீளாய்வாண்டின் போது வீதவரி தொடர்பாக வழங்கிய கழிவு ரூபா 55,546 தொகையினை கணக்குகளுக்கு எடுத்திருக்கவில்லை.

(ஆ) கணிப்பீட்டு சபை அறிக்கையின் பிரகாரம் இனங்காணப்பட்டிருந்த சபைக்குச் சொந்தமான 37 ஏக்கர் 24 ரூட் அளவான 40 மயானங்களும், 28 கூரைத் தகடுகளும், 10 அடி நீளமான தென்னை வலைகள் மற்றும் 46 – 0524 இலக்க டெய்லர் வண்டியினது பெறுமதியினையும் கணித்து கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. ரூபா 696,500 பெறுமதி

மதிப்பிட்டிருந்த 45 ஏக்கர் அளவான 45 மயானங்களும் ரூபா 215,000 பெறுமதி மதிப்பிட்டிருந்த கராஜ் மற்றும் 05 தகனசாலைகளும் நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் பெற வேண்டிய முத்திரை கட்டண மீதி ரூபா 18,390,980 தொகை எனினும், முத்திரை கட்டண பதிவேட்டின் பிரகாரம் ரூபா 9,396,681 ஆக காணப்பட்டமையால் வருமானக் கடன்பட்டோர் (முத்திரை கட்டணம்) மீதி ரூபா 8,994,299 இனால் மிகையாக காட்டப்பட்டிருந்தது.

(ஈ) பொழிப்புக் காசேடு (பி.ச. 10) இன் பிரகாரம் 3 காசேடுகள் தொடர்பாக வருட இறுதியில் உள்ளவாறு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,997,396 தொகை எனினும், நிதிக் கூற்றுக்களில் அவை ரூபா 5,587,790 தொகை என ரூபா 2,590,394 இனால் மிகையாக காட்டப்பட்டுள்ளது.

1.3.2 எதிர்பாராத பொறுப்புக்கள்

-----------------------------------------

பிரதேச சபையில் கடமையாற்றி ஓய்வு பெற்றுள்ள உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்பு தொகை செலுத்த வேண்டிய ஊழியர்கள் தொடர்பாக சபையினால் ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்தப்பட வேண்டிய பங்களிப்புத் தொகை முறைப்படி செலுத்தப்படாமையால் மீளாய்வாண்டு இறுதி வரை அந் நிதியத்திற்கு செலுத்த வேண்டிய மீதி ரூபா 7,788,765 ஆக காணப்பட்டது.

1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

-----------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டு தொடர்பாக பில் போடப்பட்டவைகள், பெறுவனவு மற்றும் இறுதி மீதியின் கீழ் 13 கணக்கு விடயங்கள் தொடர்பாக கணக்குகளின் பிரகாரம் மற்றும் குறிப்பிட்ட பதிவேடுகளின் பிரகாரம் நேரொத்த பெறுமதி இடையே ரூபா 1,687,651 இற்கான இணக்கமின்மைகள் காணப்பட்டது.

1.3.4 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

-----------------------------------------------------------------------------------------

2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டியிருந்த கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 29,647,537 ஆக காணப்பட்டதுடன் அவற்றில் ரூபா 7,869,822 தொகை 3 வருடங்களை விட பழமையான மீதிகளாகும். அதே போல் 2011 ஆண்டு முதல் தீர்க்கப்படாமல் காணப்படும் நாரம்மல பிரதேச சபையின் பேரில் ரூபா 499,813 இற்கான மீதி ஒன்றும் அதில் அடங்கியிருந்தது.

1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

--------------------------------------------------------------

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 4,976,311 இற்கான கொடுப்பனவு தொடர்பாக விரிவான பரிசோதனை மேற்கொள்ள முடியாதிருந்தது.

1.3.6 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

-------------------------------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் ஊழியர் கடன் கணக்கின் மீதி, ஊழியர் கடன் பட்டோலைகளுடன் சமப்படுத்துவதற்காக போதிய அதிகாரம் இன்றி ஊழியர் கடன் கணக்கிற்கு ரூபா 75,448 வரவு வைக்கப்பட்டுள்ளது.

(ஆ) மீளாய்வாண்டின் போது கணக்கு மீதிகளை சரி செய்வதற்காக 30 ஆம் இலக்கக் நாட்குறிப்பின் மூலம் நூலக புத்தகங்கள் மீதி ரூபா 1,099,102 இனால் பதிவழிக்கப்பட்டுள்ளது.

2 நிதி மீளாய்வு

---------------------

2.1 நிதி விளைவுகள்

---------------------------

சமர்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 4,473,513 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 4,299,052 ஆக காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 174,461 இற்கான முன்னேற்றமொன்று காணப்பட்டது. இந்த நிதி விளைவிற்கு ரூபா 24,909,334 இற்கான மூலதன உதவி மற்றும் ரூபா 26,120,143 இற்கான மூலதன செலவுகளை சீராக்கல் மேற்கொண்ட போதும் மீளாய்வாண்டிற்கான மிகை ரூபா 3,262,704 வரை குறைந்துள்ளது.

2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

-------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான சபையின் மொத்த மீண்டுவரும் வருமானம் ஆகிய ரூபா 42,704,315 இல் நூற்றிற்கு 68 ஆகிய ரூபா 28,950,380 உருவாக்கிய வருமானம் அல்லாத நீதி மன்றத் தண்டப் பணம், முத்திரைக் கட்டணம் சம்பள மீளளிப்புக்கள் ஆகிய படிகள் தன்மையுள்ள பெறுவனவுகள் அடங்கியுள்ளன. அதே போல் மூலதன வருமானமாகிய ரூபா 24,909,334 இற்கான மொத்தத் தொகையும் கமநெகும, மகநெகும போன்ற மூலங்கள் மீது வேறு நிறுவனங்களின் மூலம் அதிகார பிரதேசத்தில் அபிவிருத்தி வேலைகளுக்காக கிடைத்த பணமாகும்.

(ஆ) மீளாய்வாண்டிற்கான மொத்த மீண்டுவரும் செலவாகிய ரூபா 38,229,802 இல் நுற்றிற்கு 77 ஆகிய ரூபா 29,418,321 தனிப்பட்ட சம்பள செலவு ஆக காணப்பட்டதுடன் அவற்றில் நூற்றிற்கு 66 ஆக ரூபா 19,404,130 இற்கான சம்பள மீளளிப்பு என உள்ளுராட்சி ஆணையாளரிடம் கிடைத்திருந்தது. அதே போல் மூலதன செலவாகிய ரூபா 26,120,143 இல் நூற்றிற்கு 7 ஆகிய ரூபா 1,691,277 தொகை மாத்திரம் சபை நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டிருந்தது. மீதி நூற்றிற்கு 93 ஆகிய ரூபா 24,428,866 தொகை கமநெகும,

மகநெகும ஆகிய மூலங்கள் மீது வேறு நிறுவனங்களின் ஏற்பாடுகளின் மூலம் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி வேலைகளாகும்.

2.3 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

-----------------------------------------------------------

நாரம்மல பிரதேச சபை, 2011 ஏப்ரல் 01 திகதி முதல் நாரம்மல மற்றும் அலவ்வ பிரதேச சபை என இரண்டு பிரதேச சபைகளால் வேறாக்கும் போது அலவ்வ பிரதேச சபைக்கு 03 நடைமுறை கணக்குகளின் கீழ் உண்மையாக சாட்டப்பட்ட காசு மீதியில் இருந்து மற்றும் பகுத்திடு செய்யப்பட்ட ஐந்தொகையில் மீதிகள் இடையே காணப்பட்ட ரூபா 3,224,132 இற்கான இணக்கமின்மைகளை மீளாய்வாண்டின் இறுதி வரையும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

2.4 வருமான நிருவாகம்

-----------------------------

2.4.1 வர்த்தக வரி மற்றும் வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம்

-----------------------------------------------------------------------------------------------

சபையினால் பகிரங்கப்படுத்தப்பட்ட 2012 அக்டோபர் 19 திகதிய வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் 2013 ஆண்டு தொடர்பாக வர்த்தகவரி மற்றும் வியாபார அனுமதிப்பத்திரத்தின் கீழ் அறவிடப்பட வேண்டிய கட்டணத் தொகைக்கு வித்தியாசமான கட்டணத்தொகை ஒன்று அறவிடப்பட்டிருந்த 24 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

2.4.2 நீதி மன்றத் தணடப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

------------------------------------------------------------------------------------------

மாகாண சபை பிரதான செயலாளரிடம் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதி மன்றத் தண்டப்பணம் ரூபா 381,375 ஆகும்.

3 செயற்பாட்டு மீளாய்வு

---------------------------------

3.1 செயலாற்றுகை மதிப்பீடு

--------------------------------------

சபையினால் மீளாய்வாண்டின் போது அமுல் நடத்துவதற்கு திட்டமிட்டிருந்த ரூபா 3,157,000 இற்கான 17 செயற்திட்டங்கள் பல்வேறு காரணங்களுக்காக இரத்து செய்யப்பட்டிருந்தது. அதே போல் மீளாய்வாண்டின் போது மேற்கொள்வதற்கு திட்டமிட்டிருந்த 07 நலன்புரி விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 695,000 இல் ரூபா 639,000 குறிப்பிட்ட விடயங்களுக்காக பயன்படுத்தப்படாமல் நிருவாக விடயங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருந்ததுடன், ரூபா 240,000 பெறுமதியான 15 நலன்புரி விடயங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

3.2 முகாமைத்துவ திறமையின்மை

---

பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கப்பிடிவலான உப அலுவலகத்தை சேர்ந்த பொது சந்தையின் இலக்கம் 06 மற்றும் 13 கொண்ட கடைகளை வாடகைக்கு பெற்றிருந்தவர்களினால் வாடகை உடன்படிக்கையின் சில பிரிவுகளை மீறி குறிப்பிட்ட வர்த்தக நிலையத்தில் குடியிருந்து பக்கத்தில் இருக்கும் வர்த்தக நிலையங்களுக்கு இடையூறு விளைவிக்கும் விதமாக பல்வேறு பொருட்கள் சேகரிக்கப்பட்டுள்ளது என அறியக்கூடியதாக உள்ளது.

(ஆ) சபையினால் 2009 – 2011 காலப்பகுதியில் அங்கீகரிக்கப்பட்டிருந்த 109 கட்டட விண்ணப்பங்கள் காணப்பட்ட போதும், இணக்கச் சான்றிதழ்கள் 18 வழங்கப்பட்டிருந்தது. 91 விண்ணப்பங்களுக்கு இணக்கச் சான்றிதழ் பெற்றுக் கொள்ளாமை அல்லது கட்டட அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடியாகும் காலத்தை நீடிக்கப்படாமை தொடர்பாக சபை நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை. இக் கட்டடங்கள் அனைத்தும் நிர்மாணிக்கப்பட்டிருந்தால் சபையின் துணை விதியின் பிரகாரம் ரூபா 45,500 இற்கான கட்டட இணக்கச் சான்றிதழ் வருமானம் ஒன்றும் குறிப்பிட்ட கட்டடங்களின் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்படாவிடின் அனுமதிப் பத்திரத்தின் காலத்தை வருடாந்தம் நீடிப்பதற்காக கட்டணம் ரூபா 154,500 வருமானமொன்றினையும் சபைக்கு உழைக்கக் கூடியதாக இருந்தது.

3.3 ஒப்பந்த நிருவாகம்

---

2011 மாகாண குறிப்பிட்ட உதவியின் கீழ் உடகந்த நீர் செயற்திட்டத்திற்காக பெரோ சீமெந்து தொட்டி நிர்மாணிக்கும் வேலை 2013 ஆண்டு வரை வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. தொட்டியை நிர்மாணிப்பதற்காக கொங்கிரீட் பலகை வரையான வேலை மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. அத்துடன், அதற்காக ரூபா 341,420 இற்கான பகுதிக் கொடுப்பனவு ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

4 கணக்கு நடவடிக்கை தன்மையும் நல்லாட்சியும்

---

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

---

மீளாய்வாண்டு தொடர்பான பாதீட்டின் பிரகாரம் வாடகை மற்றும் அனுமதிப்பத்திர கட்டணமாக ரூபா 9,180,000 இற்கான வருமானமொன்று மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதும் அவற்றில் உழைத்திருந்தது நூற்றிற்கு 86 ஆன ரூபா 7,884,561 தொகை மாத்திரமே. அதே போல் மூலதன வருமானத்தின் கீழ் ரூபா 89,000,000 மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதும் அவற்றில் நூற்றிற்கு 28 ஆன ரூபா 24,909,000 மாத்திரமே உழைத்துள்ளது.

5 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

---------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடு பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) நிதிக் கட்டுப்பாடு

(ஈ) வருமான நிருவாகம்

(உ) செயற்திட்டங்கள் அமுல்நடத்தல்